இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,255, AUGUST 14, 1908.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Notification *re* Civil and Criminal Procedures for Village Tribunals.]

விளம்பரம்.

இதனாற் சகலரும் அறியும்படி விளம்பரப்படுத்துவதாவது :—உத்தம தேசாதிபதியவர்கள், "1889 ம் ஆண்டின் (24 ம் இலக்கச்) கிராமச்சங்கச் சட்டத்தின் 50 ம் பிரிவினால் தம்மீது வைத்த தத்துவங்களை உத்தியோகித்துச் செலுத்தியும், அதிகார மந்திரசபையாரது சம்மதியோடேயும், கிராமக்கோட்டார்கள் கைக்கொண்டொழுகவேண்டிய சிவில் வழக்குகளிலும் கிரிமினல் வழக்குகளிலும் நடக்கவேண்டிய மாதிரியையும் விதத்தையும் பற்றிப் பின்வரும் விதிகளை ஏற்படுத்திக்கொள்ளச் சித்தமாயினார்கள்:—

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

கொழும்பு, இராசாங்கலிகிதர் கந்தோர்,
1908 ம் ௵ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 13 ந் தேதி.

சிவில் வியவகாரம்.

இலக்கம் 18A (1) வந்து சமுகமாயிருக்கும் திறத்தவர்களின் பெயர்களை அன்றன்றைத் தினத்து நடபடிக்கை றெக்காட்டின் முதலில் எழுதிக்கொள்ளவேண்டும்.

(2) திறத்தவர் அல்லது சாட்சிக்காரர் எவராவது தாம் சத்தியம்பண்ணியேனும் உறுதிப்பாடுபண்ணியேனும் சாட்சியஞ்சொல்லுவதாகக் கேட்டுக்கொள்ளுவாராகில், அல்லது மற்றத் திறத்தவரது அல்லது அவருடைய சாட்சிக்காரர்களுள் எவராவதொருவரது சத்தியத்தினாலேனும் உறுதிப்பாட்டினாலேனும் தாம் கட்டுப்படுவதாகக் கேட்டுக்கொள்ளுவாராகில் : நீதவானானவர் அக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதோ என்றும், அக்கேள்வி சம்பந்தமாகச் செய்துகொண்ட நடபடிக்கை இன்னது என்றும், றெக்காட் வழக்குப்புத்தகத்தில் எழுதிப் பதிந்துகொள்ளவேண்டும்.

(3) யாதுமொரு வழக்கு இணங்கிக்கொள்ளப்பெற்றால், அவ்விணக்கத்தின் பொருத்தங்களை எழுதிப் பதிந்துகொண்டு, அத்திறத்தவர்களைக்கொண்டு அதற்குக் கையொப்பம் வைப்பித்தல் வேண்டும்.

கிரிமினல் வியவகாரம்.

இலக்கம் 16A (1) வந்து சமுகமாயிருக்கும் திறத்தவர்களின் பெயர்களை அன்றன்றைத் தினத்து நடபடிக்கை றெக்காட்டின் முதலில் எழுதிக்கொள்ளவேண்டும்.

(2) திறத்தவர் அல்லது சாட்சிக்காரர் எவராவது தாம் சத்தியம்பண்ணியேனும் உறுதிப்பாடுபண்ணியேனும் சாட்சியஞ் சொல்லுவதாகக் கேட்டுக்கொள்ளுவாராகில், அல்லது மற்றத் திறத்தவரது அல்லது அவருடைய சாட்சிக்காரர்களுள் எவராவதொருவரது சத்தியத்தினாலேனும் உறுதிப்பாட்டினாலேனும் தாம் கட்டுப்படுவதாகக் கேட்டுக்கொள்ளுவாராகில்: நீதவானானவர் அக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதோ என்றும், அக்கேள்வி சம்பந்தமாகச் செய்துகொண்ட நடபடிக்கை இன்னது என்றும், றெக்காட் வழக்குப்புத்தகத்தில் எழுதிப் பதிந்துகொள்ளவேண்டும்.

(3) யாதுமொரு வழக்கு இணங்கிக்கொள்ளப்பெற்றால், அவ்விணக்கத்தின் பொருத்தங்களை எழுதிப் பதிந்துகொண்டு, அத்திறத்தவர்களைக்கொண்டு அதற்குக் கையொப்பம் வைப்பித்தல் வேண்டும்

[Notification *re* Civil and Criminal Procedures for Village Tribunals.]

விளம்பரம்.

இதனாற் சகலரும் அறியும்படி விளம்பரப்படுத்துவதாவது :—"1889 ம் ஆண்டின் (24 ம் இலக்கக்) கிராமச் சங்கச்சட்டத்தின்" 50 ம் பிரிவினால் தம்மீது வைத்த தத்துவங்களை உத்தியோகித்துச் செலுத்தியும், அதிகார மந்திரசபையாரது சம்மதியோடேயும், இதன்பின்னுற் காணப்படும் விதமாக அவ்வவ் (1) (2) விதியைத் திருத்திக்கொள்ளச் சித்தமாயினார்கள் :—

1. கிராமக் கோட்டாரால் சிவில் வழக்குகளிற் கைக்கொண்டொழுக வேண்டிய வியவகார விஷயத்தில், "1906 ம் ஆ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 3 ந் தேதி ஏற்படுத்திய விதிகளுள், 17 ம் இலக்க விதியையும்,
2. கிரிமினல் வழக்கு வியவகார விஷயத்தில், 1906 ம் ஆ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 24 ந் தேதி ஏற்படுத்திய விதிகளுள், 12 ம் இலக்க விதியையும்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

கொழும்பு, இராசாங்கலிகிதர் கந்தோர்,
1908 ம் ௵ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 13 ந் தேதி.

### திருத்தியபடியான விதிகள்.

இலக்கம் 17. சிவில் வியவகாரம்.

நீதவானுர் நடபடிக்கைகள் எல்லாவற்றையும் எழுதி றெக்காட் பதிவொன்று வைத்துக்கொள்ளல் வேண்டும். இன்னும் அவர், இருதிறத்தவர்களும் சாட்சிக்காரர்களும் சத்தியம்பண்ணியோ உறுதிப்பாடு பண்ணியோ சொன்ன சாட்சியத்தை இயன்றளவு சுருக்கமாக றெக்காற் பதிவில எழுதி வைத்துக்கொள்ளல் வேண்டும். நீதவானுர் சங்கத்தவர்களது அபிப்பிராயத்தை றெக்காட் பதிவில் எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும்; அவர்களும் அதற்குக் கையொப்பமிடல் வேண்டும்; 30 ம் பிரிவில் விதித்த பிரகாரம் தாமும் தமது தீர்ப்பை றெக்காட்பதிவில் எழுதிக்கொண்டு, இருதிறத்தவர்களது முன்னிலையிற் கோட்டிலே வெளியாக அதைச் சொல்லிவிட்டு, அந்தத் தீர்ப்புக்குத் தமது கையொப்பமுந் தேதியும் இட்டுக்கொள்ளுதல் வேண்டும். நீதவானுரது தீர்மானத்துக்கு ஆதாரமாகிய நியாயங்களை அத்தீர்ப்பிலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டும்.

இலக்கம் 12. கிறிமினல் வியவகாரம்.

எதிரியானவன் குற்றப்படுத்தப்படச் சம்பவித்தால், நீதவானுரது தீர்மானத்துக்கு ஆதாரமாகிய நியாயங்கள் இவையென்றும், அவன் இன்ன அடாத்தின்பேரிற் குற்றப்படுத்தப்பட்டிருக்கிறுனென்றும் தீர்ப்பிற் காட்டியிருத்தல் வேண்டும். இன்னும் குற்றப்படுத்தப்பட்டது கிராமக்கம்மிற்றிச் சங்கத்தாரது விதியை அல்லது தீர்ப்பாய்ச்சல் விதியை மீறினமைபற்றியானால், அவ்விதியது ஏற்பாடுகளையும் அதன் இலக்கத்தையும் அது வெளிப்படுத்தப்பட்ட தேதியையும் அத்தீர்ப்பிலே விவரமாகக் காட்டியிருத்தல் வேண்டும்.

---

[By-law relating to the prevention of Nuisances, Municipal Council, Galle.]

### 10 ம் அதிகாரம்.

சவுக்கிய சமாதானக் குறைவுகள் நேரிடாதபடி தடுத்தலும் சனங்களுக்குடைய க்ஷேமமும்.

மாடுபிடி.

18A. எந்த மிருகசாதி பிடிப்பவர் ஆவது மிருகசாதி பிடித்து பவுத்திரசாலைக்குக் கொண்டுவரும்போது அல்லது எந்த மிருகசாதியையும் பிடிக்கும்போது எவராவது தடங்கல்பண்ணுவது அல்லது தடங்கல்பண்ணச்செய்வது அவநீதியாயிருக்கும்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1908 ம் ஞு ஒகஸ்ட்(ஆவணி)மீ 5 ந் உ.

ஹியு. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

[By-laws relating to Bakeries, Sanitary Board, Dodanduwa.]

1862 ம் ஆண்டு 15 ம் இலக்கச்சட்டத்தினது 5 ம் பிரிவின் கீழ் தொடந்துவை நகரத்துக்காக தென் மாகாணத்து சுக சங்கத்தவர்களால் உண்டுபடுத்தியதும், சட்டநிருமாண சங்கத்தினது ஆலோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தியதுமான பின்வரும் துணைப்பிரமாணங்கள் யாவரும் அறியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றது.

அதியுத்தம தேசாதிபதியவர்களினது கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
1908 ம் ஞு ஆவணிமீ 8 ந் தேதி.

ஹியு. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

### அப்பக் கிடங்குகள்.

1. அப்பக் கிடங்குகள் செவ்வையாகக் கட்டப்படவேண்டியது.—ஒவ்வொரு அப்பக் கிடங்கும் காற்று உலாவக் கூடியதாயும் வெளிச்சம் வரக்கூடியதாயும் சுவர்கள் சுண்ணாம்புச் சாந்தால் பூசப்பட்டு வெள்ளை அடிக்கப்பட்டும் இருக்க வேண்டியது. நிலம் காறைபோட்டு தண்ணீர் ஓடத்தக்க வசதிகள் போதியளவு செய்யப்பட்டிருக்க வேண்டியது.

2. அழுக்குத் தொட்டி முதலியவற்றிலிருந்து தூரம்.—யாதொரு அப்பக்கிடங்கு, ஒரு எருத்தொட்டி, கக்கூசு, அல்லது சாக்கடையிலிருந்து 30 அடிக்குள் இருக்கப்படாது. அல்லது அவற்றிலிருந்து கிளம்பும் துர்க்கந்தம் பிடிக்கக் கூடியதா இருக்கப்படாது.

3. தளபாடங்கள்.—அப்பக்கிடங்குக்குரிய சகல தளபாடங்களும் சாமான்களும் துப்புரவாக இருக்கவேண்டியது.

4. மாமுதலியன நல்லாயிருக்க வேண்டியது.—அப்பம் செய்வதற்காகப் பாவிக்கப்படும், மா தண்ணீர் முதலிய சகல பொருள்களும் நல்லதும் சவுக்கியத்துக்குரியதுமாய் இருக்கவேண்டியது.

5. அப்பக்கிடங்குகள் சுத்தமாக இருக்கவேண்டியது.—அப்பக்கிடங்கைச்சேர்ந்த இடங்களில் உள்ளனவும் அடுக்கிருப்பனவுமாகிய சகல கழிவுபொருள்களும் அழுக்குகளும் சுணக்கமில்லாமல் அகற்றப்பட வேண்டியது.

6. அப்பக்கிடங்கில் வேலையாயிருப்பவர்கள்.—அருவருப்புக்கிடமான வியாதியுடையவர்கள் தொற்ற அல்லது பரம்பக்கூடிய வியாதியுடையவர்கள், அல்லது அப்படியான வியாதிக்காரரைச் சொற்ப காலத்துக்குமுன் பராபரித்தவர்கள் அல்லது ஸ்நானம்செய்யாமல், அல்லது மற்றும்விதமாய் அழுக்காயுள்ளவர்கள் ஆகிய இவர்களை அப்பக்கிடங்குகளில் வேலையில் வைக்கப்படாது.

7. அப்பக்கிடங்குகள் எப்போதும் சோதிப்பதற் கிடமாயிருக்கும்.—ஒவ்வொரு அப்பக்கிடங்கும் அதில் நடக்கும் வேலைகளும் அதின் பராமரிப்பும் சுகசங்கத்தலைவராலும் சுகாதார உத்தியோகத்தராலும் சுகசங்கத்தலைவரால் அதிகாரம் பெற்றவர்களாலும் எப்போதும் சோதிக்கப்படுதற்குரியதாயும் அந்தச் சோதனைக்கு அமைவுடையதாயும் இருக்கும்.

[By-law relating to registration of Dogs, Matara District.]

1901 ம் ஆண்டின் 25 இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய 1908 ம் ௵ பங்குனி மீ 30 ந் தேதியைக் கொண்ட பிரசித்தத்தில் காட்டிய கிராமங்களில், நாய்களுக்கு விசருண்டாவதையும் நீஸ்டேரம் செய்வதையும் தடைபண்ணும்பொருட்டு, மத்தியமாகாணத்தின் மாத்தறை டிஸ்திறிக் ஸ்தான உப அரசாட்சி ஏசண்டரால் உண்டாக்கப்பட்ட பின்வருந் துணைப்பிரமாணங்கள், சகலருமறியும்படியாக இத்தாற் பரசித்தம்பண்ணப்படுகின்றன.

மகோத்தமரவர்களினது கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடேத்தார் கந்தோர்,
கொழும்பு, 1908 ம் ௵ ஆவணி மீ 6 ந் உ.

ஹியு. கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிடேத்தார்.

துணைப்பிரமாணங்கள்.

1. 1908 ம் ஆண்டு பங்குனிமாதம் 30 ந் தேதியைக்கொண்ட பிரசித்த பத்திரத்தில் சொல்லப்பட்ட கிராமங்களின் எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு நாய்க்கும் வருஷமொன்றுக்கு 25 சத வீதம் வரிப்பணம் கொடுக்கவேண்டியது.

2. இவ்வரிப்பணம் ஆடிமாதம் 1 ந் தேதி தொடக்கம் இறுக்கப்படத்தக்கதாயிருக்கும். ஒவ்வொரு வருஷமும் ஆவணிமாதம் 1 ந் தேதிக்குள் முற்பணமாய்க் கொடுக்கவேண்டியது.

3. இவ்வரிப்பணத்தை அறவிடுதற்காக சொல்லப்பட்ட கிராமங்களின் எல்லைக்குட்படவிருக்கும் ஒவ்வொரு வீட்டுக்காரனும் வருஷந்தோறும் ஆனிமாதம் 1 ந் தேதிக்குமுன் இத்தோடிணைத்திருக்கும் அட்டவணை மாதிரியான டாப்பில் தன் வீட்டிலுள்ள நாய் அல்லது நாய்களின் கணக்கையும் சொந்தக்காரன் பெயரையும் குறித்து உப அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்டவரிடங் கொடுக்கவேண்டியது.

4. சொல்லப்பட்ட கிராமங்களின் எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு நாய்க்கும் உப அரசாட்சி ஏசண்டரால் முத்திரை குத்தப்பட்ட வாரொன்று கழுத்திற் கட்டியிருக்கவேண்டியது. வரிப்பணங் கொடுபட்ட ஒவ்வொரு நாய்க்கும் உப அரசாட்சி ஏசண்டர் முத்திரைகுத்திய வாரொன்று 25 சத விலைக்குக் கொடுப்பார். நாய்க்காரன் தனது வாரைக் கொடுத்தால் பணமறவிடாது முத்திரைகுத்திக் கொடுக்கப்படும்.

5. 3 ம் பிரமாணப்படி டாப்புக் கொடுபட்டபின் வரிப்பணம் கட்டுப்படாத நாய் அல்லது நாய்களுக்கு சொல்லப்பட்ட கிராமங்களின் எல்லைக்குட்பட வசிப்பவர் எவராவது சொந்தக்காரனுகில், அவர் உடனே அந்த நாய் அல்லது நாய்களின் டாப்பை எழுதி உப அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்டவருக்குக் கொடுக்கவேண்டியது. அந்த டாப்புக் கொடுத்துப் பதினைந்து நாட்களுள் வரிப்பணங் கொடுத்துப்போட வேண்டியது.

6. உப அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்டவர் பதியும்படி கேட்கப்படும் நாயைத் தன்னிடங் கொண்டு வந்து காட்டும்படி கேட்கலாம். அப்படி அது காட்டப்படும் வரையும் பதிவுபத்திரத்தைக் கொடாமல் மறுக்க அவருக்கு உரித்துண்டு.

7. யாதொரு நாய் உயிரோடிருக்கக் கூடாத விதமாய் அவயவப் பழுதடைந்து அல்லது நோய்பிடித்திருந்தால், அல்லது சொந்தக்காரனுல் வாடிக்கையாய்க் கொடுமையாக நடத்தப்பட்டால், அல்லது எப்பொழுதந் தேடப்படாது போனுல், அதற்காகப் பதிவுபத்திரங் கொடாதுவிடுவதற்கும், அல்லது பதிவுபத்திரங் கொடுத்திருந்தால் அந்தப் பத்திரத்தை அழித்துவிடுவதற்கும் உப அரசாட்சி ஏசண்டருக்குத் தத்துவமுண்டு.

8. பதிவு பத்திரங் கொடாது விடப்பட்ட அல்லது கொடுத்த பத்திரம் அழிக்கப்பட்ட ஒவ்வொரு நாயையும் அதன் சொந்தக்காரன் விளம்பரங் கிடைத்தவுடன் உப அரசாட்சி ஏசண்டரால் நியமிக்கப்பட்டவரிடம் அவர் வீட்டில் அல்லது கந்தோரில் விளம்பரத்தில் காட்டிய நேரத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டியது. அப்படி ஒப்புவிக்கப்படும் ஒவ்வொரு நாயும் உப அரசாட்சி ஏசண்டருக்கு சரியென்று தோற்றும் விதமாகக் கொல்லப்படும் அல்லது வேறுவிதமாகச் செலவிடப்படும்.

இடாப்பு.

இலக்கம்——.

வீட்டிலக்கம்——.
தெரு——.
கிராமப் பெயர் ——.
தோட்டப் பெயர் ——.
வீட்டுக்காரன் பெயர் ——.

இலக்கம் ————.
190—— ம் ஆ. தை மீ 1 ந் தேதி தொடக்கம் எழுதப்பட்டு 190 —— ம் ஆ. ஆனி மீ 1 ந் தேதிக்குமுன் கொடுபட வேண்டிய கணக்கு.
வீட்டிலக்கம் ————.
தெரு ————.
கிராமப் பெயர் ————.
தோட்டப் பெயர் ————.
வீட்டுக்காரன் பெயர் ————.

| நாயின் தொகை. | நாயின் தொகை. | விபரம். | | | குறிப்பு. | சொந்தக்காரன் பெயர். | காசுகட்டுந் தேதி. |
|---|---|---|---|---|---|---|---|
| | | குலம். | ஆண் பெண். | நிறம். | | | |
| 1<br>2<br>3<br>4<br>5 | | | | | | | அடுத்துவரும் ஆடி மாதம் 31 ந் தேதியில் அல்லது அதற்கு முன் |

இந்த இடாப்புக் கொடுத்த தேதி.

190 — ௵ ————மீ ——உ.

இந்த இடாப்புக் கொடுத்த தேதி 190 — ௵ ————————மீ —— உ.

வீட்டுக்காரன் கையொப்பம்.

இந்த டாப்புக் கிடைத்து ஒரு கிழமைக்குள் மேற்சொல்லிய வீட்டுக்காரன் டாப்பை எழுதி முடித்துக் கொடுத்துப்போட வேண்டும். இப்படிச் செய்யத் தவறுபவர் 20 ரூபா தெண்டத்துக்குப் பாத்திரராவர்.

190 — ௵ ————————மீ —— ந் உ.

கையொப்பம்.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 517, N. P.

கொலோனியல் செக்கிரத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஹு ஒகெஸ்ட் (ஆவணி) 5 ந் உ.

1908 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 22 ந் தேதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவர்ன்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்து முடிவுபண்ணப்படும்.

29 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தீவுப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,428. குறிச்சி—நயினாதீவு.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | அக்கரொன்றுக்கு டாவிட் புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12552 | குளத்துவெளிஓடை | அரசாட்சி | நெல்லுக்குத்தக்க | 2 | 3 | 16 | 15 |
| 12553 | இருப்பையடி | கணபதிசின்னத்தம்பி பெண் நாகமுத்து | சிறு தானியத்தோட்டம் | 0 | 2 | 22 | 18 |
| 12554 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 4 | — |
| 12555 | டிை | வேலாயுதர் முருகேசு | சிறுதானியத் தோட்டம் | 1 | 1 | 12 | 16 |
| 12556 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 1 | 0 | — |
| 12557 | டிை | டிை | — | 0 | 0 | 28 | — |
| 12558 | சோதமுனைவெள்ளோடை | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 3 | 3 | 24 | 16 |
| 12559 | கட்டையன்புலம் | டிை | டிை | 1 | 1 | 10 | 17 |
| 12560 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 16 | — |
| 12561 | தெருவம் | அப்பாக்குட்டி சின்னத்தம்பியும் மார்க்கண்டர் பொன்னரும் | நெல்வயல் | 0 | 2 | 28 | 18 |
| 12562 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 12 | — |
| 12563 | டிை | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 1 | 2 | 20 | 16 |
| 12564 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 28 | — |
| 12565 | இலந்தைக்குளி | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 0 | 3 | 32 | 15 |
| 12566 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 20 | — |
| 12567 | டிை | நாகனுதர் வயிரமுத்து | நெல்வயல் | 0 | 1 | 16 | 16 |
| 12568 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 7 | — |
| 12569 | டிை | வேலாயுதர் கணபதி | நெல்வயல் | 0 | 1 | 8 | 17 |
| 12570 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 7 | — |
| 12571 | டிை | நாகனுதர் வயிரமுத்துவும் பாறுபதியும் | நெல்வயல் | 0 | 1 | 16 | 16 |
| 12572 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 6 | — |
| 12572 | ஆமையாகாடு | செங்கமலையர் தியாகர் | நெல்வயல் | 0 | 2 | 8 | 15 |
| 12574 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 8 | — |
| 12575 | டிை | கட்டையன் பெண் நாகமுத்து | நெல்வயல் | 0 | 0 | 16 | 15 |
| 12576 | டிை | முருகேசு பெண் பாறுபதி | டிை | 0 | 0 | 32 | 15 |
| 12577 | டிை | மார்க்கண்டர் பொன்னரும் மறுபேரும் | டிை | 0 | 1 | 10 | 16 |
| 12578 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 0 | 6 | — |
| 12579 | டிை | கார்த்திகேசு நாராணியும் மறுபேரும் | நெல்வயல் | 1 | 2 | 0 | 16 |
| 12580 | டிை | ரேட்டில் அருகதிகம் | — | 0 | 1 | 24 | — |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளையின்படி,

ஹியு. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்ளைவக்காகிய காணி விளம்பரங்கள்.

[Kalagama Korale Vadinigama, Anuradhapura District.]

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மகா இலுப்பள்ளம் என்னுங் குளத்தால் மூடப்பட்ட பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதம படத்து இலக்கம் 3,425. குறிச்சி—கலாகம கோறளை வேதினிகமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | அ. | பே. |
|---|---|---|---|---|---|---|
| E 154 | வேதினிகமவயல் | நெல்வயல் | கப்புருளைகே உடையாரேயும் மறுபேரும் | 5 | 3 | 24 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஹூ ஐப்பசிமாசம் 2 ந் தேதியிலன்று ஒரு மணிக்கு அனுராஜபுரத்தில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அனுராஜபுரக் கச்சேரி,
1908 ம் ஹூ ஆவணிமீ 4 ந் உ.

ஏ. டபிள்யு. செய்மோர்,
அரசாட்சி ஏசண்டுக்காக.

---

[Lindula, Nuwara-Eliya District.]

1876 ம ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பப்லிக்வேர்க்ஸ் டிப்பார்ட்மென்ட் (பைனீர் றேட்டு) வேலைக்காக தேவையாயிருக்கும் கல்லுக்குழிக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,805. குறிச்சி—லிண்டுலா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| H 907 | பெயர்பீல்ட் தோட்டம் | தேயிலை | பெயர்பீல்ட் தோட்டம் உரித்தாளி | 0 1 34 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிகொடுப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஹூ செப்டம்பர்மாசம் 11 ந் தேதியிலன்று பின்பகல் ஒரு மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியா கச்சேரி,
1908 ம் ஹூ ஆகஸ்ட்மீ 6 ந் உ.

எவ். பார்ட்லெட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Rambukkana, Matara District.]

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவில்லேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1908 ம் ஹூ ஆகஸ்ட் (ஆவணி)மீ 14 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், மாத்துறை உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடம் மாத்துறை கச்சேரியில் முகாமுகமாய் அல்லது எழுத்து மூலமாய் தங்களுக்குண்டெனும் உரித்தை சொல்லிநிக்காவிட்டால், சொல்லிய உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்கள், 1897, 1899, 1900, 1903 ம் ஆண்டுகளின் வெண்காணிக் கட்டளைச்சட்டத்தால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் மேல்சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உருத்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவாரென்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. எல். கிண்டர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

மாத்துறைக் கச்சேரியில்,
1908 ம் ஆண்டு மார்ச்சுமீ 30 ந் தேதி.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கின் மொறவக்கோறளையில் றம்புக்கன யென்னும் ஊரிலிருக்கும் இதற்கு அணைத்திருக்கும் *நிச்சயப் பிளான்களில் காண்கும் இதன்கீழ் காண்கும் காணிகள், அதாவது:—

I.

பிரதம பிளான் 1.

| காணிப்பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| G 1c | துமுல்லேஇகளவத்த ... ... ... ... | 0 0 5 |

இதின் எல்லை : வடக்கு-துமுல்லே இகளவத்த (காணிப்பிரதி G 1e) அரசாட்சி உரித்துச்சொல்லும் காணி ; தெற்கு-வலிவேயிலிருந்து மொறவக்கைக்குபோகிற ராஜவீதி ; மேற்கு-ஏ. ஏ. குணரத்ன உரித்துச்சொல்லுகிற பொல்கொறட்டுவ காணிப்பிரதி G 1b ; கிழக்கு-டி. ஏ. டபிளியு. றத்நாயக மற்றவர் உரித்துசொல்லுகிற அலுத்கெதர வத்த, காணிப்பிரதி G 1a.

II.

பிரதம பிளான் 1.

| காணிப்பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| G 1d | துமுல்லேஇகலவத்த ... ... ... ... | 0 0 23 |

இதின் எல்லை : வடக்கு-அரசாட்சியார் உரித்துசொல்லுகிற துமுல்லேஇகளவத்த காணிப்பிரதி G 1e ; கிழக்கு-ஏ. ஏ. குணரத்ந உரித்துசொல்லுகிற பொல்கொறடுவ (காணிப்பிரதி G 1b) ; தெற்கு-வலிவேயிலிருந்து மொறவகைக்கு போகிற ராஜவீதி; மேற்கு-அரசாட்சியார் உரித்துசொல்லுகிற தலுமுன்னே இகளவத்த.

* இக்கிளிசின் IV. ம் பாகம் 1062 ம் பக்கத்தின் பட்டத்தைப் பார்க்க.

3,147

[Tender for Arrack Rents in Northern, North-Central, and Uva Provinces.]

உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்ட "போட்" சமாஜம் ஒன்று, பின்னும் சொல்லப்படும் அரக்குச் சாராயக் குத்தகைகளை 1909 ம் ஆண்டிக்கு விலைக்குவாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைத் திறந்து கவனித்துப்பார்க்கும் நோக்கமாக, கவுன்சில் சங்கமண்டபத்திலே 1908 ம் ௵ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 25 ந் தேதியில் கூடும் என்று இதனால் அறிவிக்கப்படுகின்றது.

(1) வடமாகாணம்—யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவு.
(2) வடமத்திய மாகாணம்—அநுராதபுர டிஸ்திறிக் பிரிவு.
(3) ஊவா மாகாணம்—வதுளை டிஸ்திறிக் பிரிவு.

குறித்த நாள் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப்பிறகு யாதொரு கேள்விப்பத்திரமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒவ்வொரு கேள்விக்காரனும் தான் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் விலையைப் பத்திரத்திலே காட்டி எழுதவேண்டும். மேற்காட்டியபடி வெவ்வேறுகக் குத்தகைக்குத் தனித்தனி கேள்விப்பத்திரம் போடவேண்டும். கேள்விப்பத்திரத்திலே பெரும் குத்தகையின் நொம்பரும் போட்டிருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்களைச் சரியாய்ச் சீல் முத்திரைவைத்தொட்டி, கலோனியல் சக்கிடேத்தார் கனம் மென் எச். ஜீ. கிளிவ்லோட், சீ. எம். ஜி., என்று மேல்விலாசமிட்டு, "அரக்குச் சாராயக்குத்தகை ஒப்பந்தக் கேள்வி" என்று எழுதப்பட்டு தபால் மார்க்கமாக அனுப்பிவைக்கலாம்; அல்லது கேள்விக்காரன் தானே போட் சமாஜத்துக்கு முகமுகமாக நேரேகொடுக்கலாம்.

விற்பனவுக் கொத்திச மாதிரிக் கடுதாசிகளும் தவறணைக் கடைகளின் இடாப்பும் இலங்கையில் எந்தக் கச்சேரியிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரம் அறியவேணுமானால், மேன்மாகாணத்து கனம் கொன்றிரோல்லர் அவ் றெவனியூ (யாகிய அரசிறைவருமான அதிகாரத்) துரையவர்களுக்குக் காகிதம் எழுதியாவது நேரே அவரைக் கண்டு கேட்டாவது பெற்றுக்கொள்ளலாம்.

இங்கிலீஷ் பேச அறியாத கேள்விக்காரர்கள், போட் சமாஜத்தாரோடு சம்பாஷிக்க விரும்புகிறவர்கள், தங்கள் தங்கள் துவிபாஷிகளை இட்டுக்கொண்டு வரக்கடவர்கள்.

கவுன்சில் சங்கமண்டபத்துக்குக் கேள்விக்காரன் தானேயாவது அவனது அதிகாரம்பெற்ற ஏஜன்றுத் தத்துவகாரனாவது வந்திருந்து, தான் கேட்ட வீதம் ஒரு மாசக் குத்தகைத் தொகைபணம் உடனேயே கட்டுவதற்கு ஆயத்தமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டு கேள்விப்பத்திரங்கள் அல்லது அதற்கு மேலானவைகள் ஒரு சமத்தொகைக் கேள்வியாயிருக்கும் பக்ஷத்தில், இரண்டிலொன்று செய்வதற்கு போட்சமாஜத்துக்கு இடம் உண்டு: அதாவது, அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மட்டுமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் குத்தகையை உடனேயே போடலாம்; அல்லது புதுக் கேள்விப்பத்திரங்களைக் கேட்கலாம்.

குத்தகை வாங்கினவர் ஒரு கலனுக்கு நாலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் அரக்குச் சாராயம் விற்றற்கு இடங்கொடுக்கப்படுவார்கள்.

கொழும்பு கனம் றெவனியூக் கொன்றிரோல்லர்இடம் எழுத்து மூலமாக ஆவது, நேரே கண்டு கேட்டாவது, கேள்விப்பத்திர மாதிரிக் கடுதாசிகள் சும்மா விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தம தேசாதிபதியவர் கட்டளைப்படி,

கொழும்பு, இராசாங்க லிகிதர் கந்தோர்,
1908 ம் ௵ ஆகஸ்ற் (ஆவணி) ௴ 7 ந் உ.

கியூ. கிளிவ்லோட்,
இராசாங்க லிகிதர்.

---

[Tenders for the Civil Medical Department.]

பின்னும் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1909 ம் ஆண்டிலே தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திறுத்து ஒப்பந்தமசெய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

3, கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும்; அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேணும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "———— ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ௵ ஆவணி ௴ 17 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும். தபாலுறையின் மேற்புறத்தில் ஆசுபத்திரியின் பெயரும் எழுதவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதியனுப்பவேண்டும். இந்த கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம், அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6 அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் கீழ்க் காணப்படும் அட்டவணையின்படி முதபலத்தைத் திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டு வரல் வேண்டும். கொந்திறுத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறுத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடக்காய்விடும். கொந்திறுத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறுத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திறுத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கைபொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக் கடுதாசியுடனும் அனுப்ப வேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

8. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறுத்து ஒப்பந்தக்காரன் பின்னுற் காணப்படும் பணப்பிணை கொடுக்கவும், ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விபத்திரத்தின் பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். ஐந்நூறு ரூபா அல்லது மேற்பட பிணைகட்டவேண்டிய ஒப்பந்தக்காரர் தாங்கள் கட்டவேண்டிய தொகையை வேண்டுமானுல் நிலைப்பணமாக (Fixed Deposits ஒரு பாங்கியில் கட்டவேண்டும். இதன்மேல் பிரியமானுல் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிகளைக் கொந்திறுத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன் செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விபத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால், அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினுல் கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | கேள்விப்பத்திரம் பெறுதற்கு முன் கட்டவேண்டியதொகை. | | பணப்பிணைத் தொகை. |
|---|---|---|---|
| | ரூபா. | | ரூபா. |
| கொழும்பு-பெரிய ஆசுபத்திரியும், டீ செய்சா பிரசவ ஆசுபத்திரியும், பொறளை பெண்கள் ஆசுபத்திரியும் ... | 500 | ... | 1,500 |
| கெத்தல குட்டரோக ஆசுபத்திரி ... ... | 500 | ... | 1,000 |
| கணத்தை அம்மை, பேதி, பொக்குளிப்பான் ஆசுபத்திரிகள் ... ... | 500 | ... | 500 |
| லேடி அவலக் ஆசுபத்திரி. | 500 | ... | 500 |
| விக்டோரியா கண்ரோகஆசுபத்திரி ... ... | 500 | ... | 500 |
| உஷ்ணதேசரோப் ஆசுபத்திரி ... ... | 125 | ... | 250 |
| ராகம் லைகள் ஆசுபத்திரி | 500 | ... | 500 |

(கையொப்பம்) அல்லன் பெறி,
பிரதான சிவில் மெடிகல் ஆபீசர்.

கொழும்பு, 1908 ம் ஹூ ஜுலை 29 ந் உ.

---

[Tenders for the Civil Medical Department.]

பின்னுற காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1909 ஆண்டிலே தேவையான சாப்பாட்டுச் சாமான்களை கொந்திறுத்து ஒப்பந்தஞ்செய்ய விரும்புமவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக் கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஓர் தபாலுறையில் வைத்து, முத்திரையிட்டு, கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர், (Office of the Controller of Revenue), கொழும்பு என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற்போடவேண்டும். அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "—ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச்சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக்கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ஆண்டு ஆவணிமாசம் 19 ந் தேதி மத்தியானத்துக்குப்பிந்தாமல் சேரல் வேண்டும். தபாலுறையின் மேற்புறத்தில் ஆசுபத்திரியின் பெயரும் எழுதவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறுத்து ஒப்பந்தக்கேள்விக் கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக்கேள்விகள் எழுதியனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6. அச்சிட்ட ஒப்பந்தக்கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் பின்னுற் காணப்படும் அட்டவணையின்படி முற்பணத்தை திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல்வேண்டும். கொந்திறுத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறுத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினுல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திறுத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததின்மேல் ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக்கொந்திறுத்துக்கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திறுத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக்கடுதாசியுடனும் அனுப்ப வேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத்தபாலிற் காட்டவேண்டும்.

8. சாமான் மாதிரிகள் கேட்கும்போதுகொடுக்க வேண்டும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறுத்து ஒப்பந்தக்காரன் பின்னுற் காணப்படும் பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். ஐந்நூறு ரூபா அல்லது மேற்படப் பிணை கட்டவேண்டிய ஒப்பந்தக்காரர் தாங்கள் கட்டவேண்டிய தொகையை வேண்டுமானுல் நிலைப்பணமாக (Fixed Deposits) ஒரு பாங்கியில் கட்டவேண்டும். இதன்மேல் பிரியமானுல் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிகளைக் கொந்திறுத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன்செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விபரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி யொன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கைபொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யாத தவறினால், கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11 ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும், அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

---

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | கேள்விப்பத்திரம் பெறுதற்குமுன் கட்ட வேண்டிய தொகை. | பணப்பிணைத் தொகை. |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| கொழும்பு வைத்திய ஆசுபத்திரி ... ... | 500 ... | 2000 |
| கொழும்பு பெரிய ஆசுபத்திரியிலே தோட்டத்துரைமாருக்கும், கப்பற்காரருக்கும், பிரயாணிகளுக்குமாக விடப்பட்டவும், அந்தோனிஸ், காகிஇல் என்ற பெயர்களையுமுடைய படுக்கை அறைகளுக்குமாக ... | 500 ... | 500 |
| கொழும்பு பொலிசு ஆசுபத்திரி ... ... | 500 ... | 500 |

(கைபொப்பம்) அல்லன் பெறி,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசர்.

கொழும்பு 1908 ம் ௵ ஆடிமாசம் 29 ந் உ.

---

[Tenders for the Civil Medical Department.]

பின்னால் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1909 ம் ஆண்டிலே தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (the Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும்; அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "———— ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ௵ ஆவணி ௴ 26 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும். தபாலுறையின் மேற்புறத்தில் ஆசுபத்திரியின் பெயரும் எழுதவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்த கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து அல்லது அந்த அந்த மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் பின்னாற் காணப்படும் அட்டவணையின்படி முற்பணத்தைக் கச்சேரியிலாவது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டு வரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய் விடும். கொந்திருத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கைபொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கைபொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக் கடுதாசியுடனும் அனுப்பவேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்

8. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்னாற் காணப்படும் பணப்பிணை கொடுக்கவும், ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கைபொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். ஐந்நூறு ரூபா அல்லது மேற்பட பிணைகட்டவேண்டிய ஒப்பந்தக்காரர் தாங்கள் கட்டவேண்டிய தொகையை வேண்டுமானால் நிலைப்பணமாக (Fixed Deposits) ஒரு வங்கியிலே கட்டவேண்டும். இதன்மேல் பிரியமானால் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிகளைக் கொந்திருத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன் செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால், அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கைபொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

---

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | கேள்விப்பத்திரம் பெறுதற்கு முன் கட்ட வேண்டிய தொகை. | பணப்பிணைத் தொகை. |
|---|---|---|
| டிஸ்திறிக் ஆசுபத்திரி. | ரூபா. | ரூபா. |
| அவிசாவலை ... | 200 ... | 400 |
| நாபொடை ... | 150 ... | 300 |
| டெல்தொட்டை ... | 100 ... | 200 |
| டிக்கோயா ... | 200 ... | 400 |